பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 12 புதன்கிழமை (25-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 119

# மணலாறில் பெரும் இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கிச் சென்றது!

## வவுனியா பகுதியில் நேற்றும் குண்டு வீச்சு! ஒருவர் பலி!!

வவுனியா, மார்ச் 25

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை இரு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பழம்பாசி என்ற இடத்தைச் சேர்ந்த வரதன் மாஸ்டர் என்பவர் இத்தாக்குதலின் போது கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## சிலாவத்துறையில் நேற்று படையினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

மன்னார் சிலாவத்துறை முகாமிலிருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேறிய படையினரை அகத்திமுறிப்பு சந்தியில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

தாக்குதலையடுத்து முன்னேறும் முயற்சியைக் கைவிட்ட படையினர், பிற்பகல் 3 மணியளவில் புலிகளின் தாக்குதல் தீவிரமடைந்ததை அடுத்து முகாமுக்கு பின்வாங்கினர்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டாம் லெப்டினன்ட் மதுரலிங்கம் வீரமரணமடைந்தார். [உ-த]

## பூநகரி படையினர் சூடு! குருநகர் மீனவர் பலி!!

குருநகர், மார்ச் 25

பூநகரி — கல்முனைப் பகுதியில் தரித்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளம் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்தார்.

பூநகரி—பூவரசந்தீவுப் பகுதியில் பந்தலடி—கல்லடிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இருபதுக்கும் மேற்பட்ட வள்ளங்களைக் குறிவைத்தே படையினர் திடீர்த் தாக்குதலை நடத்தினர்.

வேட்டுகள் தீர்க்கப்பட்டதும் பல மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்தி தப்பிக்கொண்டனர். வள்ளத்தில் நின்ற — குருநகரைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சசிகுமார் [வயது 15] என்ற இளைஞர் தலையில்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி விரைவில்

பல்கலைக்கழகங்களின் 1991—92ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான வெட்டுப் புள்ளிகள் அடுத்த மாதம் [ஏப்ரல்] 15 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என கொழும்பிலிருந்து அறியவந்துள்ளது.

வெட்டுப் புள்ளிகளை நிர்ணயிப்பதற்கான வேலைகள் இப்போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அத்தகவல்கள் தெரிவித்தன. [அ-3]

### ஐந்தாம் ஆண்டுக்குரிய

## புலமைப் பரிசில் பரீட்சை ஏப்ரல் 27 இல் நடைபெறும்

வடபகுதிக்குரிய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சை அடுத்த மாதம் 27 ஆம் திகதி நடைபெறும்.

கடந்த ஆண்டுக்குரிய இப்பரீட்சை நாட்டு நிலை காரணமாக வடக்கில் நடைபெறவில்லை என்பது தெரிந்ததே.

இப்பரீட்சை எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேசமயம்—

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளின் அதிபர்கள், இன்று காலை 9 மணிக்கு தத்தமது கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை சந்தித்து பரீட்சை ஏற்பாடுகள் குறித்து ஆராய்வர் என்று தெரிவிக்கப்பட்டது. [த-3]

## புலிகளின் கவசப்படை சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 25

கடந்த செவ்வாய்க்கிழமை மணலாறில் தொடங்கி ஒரு வார காலம் நீடித்த கடும் சமரில் பெரும், ஆளணி, ஆயுத இழப்புகளுடன் இராணுவம் நேற்றுப் பின் வாங்கிச் சென்றது; தனது முகாமுக்குத் திரும்பியது.

ஒரு வார காலப் போரில், கவச வாகனங்கள், நவீன ரக ஆயுதங்கள் உட்பட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களையும், ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்களையும் இராணுவத்தினர் இழந்து பெரும் தோல்வியுற்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மணலாறில் இராணுவத்தினர் பெரும் எடுப்பிலான மும்முனைத் தாக்குதல்களை நடத்தி முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

''ஹையபார'' என்ற இந்த இராணுவ நடவடிக்கையின் போது பெரும் பணச்செலவில் வாங்கப்பட்ட கனரக வாகனங்கள் உட்பட பல புதிய நவீன இராணுவத் தளபாடங்களைப் படையினர் பயன்படுத்தினர். நவீன ஆயுதங்கள் பலவும் உபயோகிக்கப்பட்டன.

உக்கிரமான விமானத் தாக்குதல்கள், கடல், தரைத் தாக்குதல்கள் மூலம் படையினர் முன்னேற முயன்ற போதிலும் அவர்கள் தமது முயற்சியில் தோல்வி கண்டனர்.

கவச வாகனங்கள் சகிதம் படையினர் தாக்குதல்களை நடத்திய போதிலும் விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்து மடக்கி உக்கிர

[6 ஆம் பக்கம் பார்க்க]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கடந்த வருடம் ஜூன் மாதம் திருமலை கொட்டடி என்ற இடத்தில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற சண்டையின் போது காயமடைந்திருந்த லெப்டினன்ட் நளன் [கிளிவெட்டி] வீரமரணமடைந்தார். [உ-த]

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 25

நேற்று நண்பகல் 11 மணியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் 56 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பொதிகள் இன்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, நாளை விநியோகிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## மூதூரில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, மார்ச் 25

மூதூரில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச்சட்டம் இன்று காலை 8 மணியுடன் நீக்கப்படும் என்று கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. [உ-த]

### கொக்கட்டிச்சோலை சம்பவம்:

## படுகொலைகளில் ஈடுபட்ட படையினரைத் தண்டியுங்கள்!

### ஆணைக்குழு ஜனாதிபதியிடம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 25

★ கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினரால் படுகொலையுண்டவர்களின் குடும்பங்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும்.

★ இப்படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும்.

★ இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

— இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

கொக்கட்டிச்சோலைச் சம்பவம் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



ஆணைக்குழு சொன்னது ஆனைக் கட்சிக்காரர் காதிலை விழுமோ...!

### ப. நோ. கூ. சங்கங்களுக்கு

## நீரிறைக்கும் இயந்திரங்கள் கப்பலில் வந்து சேர்ந்தன

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிதி வழங்கி கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்த பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு பொருள்கள் பல பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ளன.

சீனி, உப்பு, சர்க்கரை, மல்லி, நீரிறைக்கும் இயந்திரம், கிருமிநாசினி தெளிகருவி, சயிக்கிள் ரயர்-ரியூப், காகிதாதிகள், புடைவை வகைகள் என்பன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்துள்ளன.

[6ஆம் பக்கம் பார்க்க]

### ஜி. சி. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை:

## வினாத்தாள்கள் விரைவில் விமானத்தில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 25

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சைக்கான வினாத்தாள்கள் நாளை மறுதினம் அல்லது 29 ஆம் திகதி விமான மூலம்— பலாலி வழியாக — யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என்று தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை கொழும்பு சென்ற வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், அங்கு பரீட்சை ஆணையாளர் உட்பட [illegible] அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியதை [illegible] திட்டமிட்ட திகதியில் நடத்துவதற்கு அனுமதியளிக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்திற்குரிய வினாத்தாள்களைக் கொண்டு வரவும் —விடைத் தாள்களை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கும் தேவையான உதவிகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

வினாத்தாள்கள் நாளை மறுதினம் விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டு

[[illegible] ஆம் பக்கம் பார்க்க]

## ரஷ்ய அணு உலையில் கதிரியக்கக் கசிவு!

மாஸ்கோ, மார்ச் 25

ரஷ்யாவில் நேற்றுக் காலை இரண்டாவது பெரிய நகரான செ. பீற்றர்ஸ்பேர்க்கில் உள்ள அணு உலை நிலையத்தில் இருந்து கதிரியக்கக் கசிவு ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நடுத்தர பாரதூரமான கதிரியக்கக் கசிவு விபத்து இது என்று ரஷ்ய அணு விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

அணு உலை நிலையம் மற்றும் அணு மின் நிலையம் ஆகியவற்றில் ஏற்பட்ட கதிரியக்கக் கசிவின்போது, கதிர்ச் செறிவுள்ள அயோடின் வாயு வெளியேறியது என்றும் —

இது சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கக்கூடிய அளவு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கசிவு ஏற்பட்ட அணு உலை நிலையம் உடனடியாக மூடப்பட்டு விட்டது என்று ரஷ்ய

[5 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசரத்தினம் பிரிதிவிராஜ்

[கொக்குவில் இந்துக் கல்லூரி, பழைய மாணவன்]

**தோற்றம்:** 07 - 06 - 1962 **மறைவு:** 01 - 04 - 1986 (லண்டன்)

**திதி:- 25 - 03 - 1992**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! - நீ அணைந்தும் அணையாமல் ஒளி வீசுகின்றாய், உன் நினைவுகளை மெல்லமுடியாமல் நாம் வாடுகின்றோம். ஆண்டுகள் அடுக்கடுக்காய் உருளுகின்றபோதிலும், உன் நினைவலைகளை எம்மால் நிறுத்தமுடியவில்லை! துன்பமோ இன்பமோ அங்கெல்லாம் துளிர்த்துவிடும் உன் நினைவுகள், உன் வண்ணமும் வடிவுகளும் எப்போதும் எம்மை வாட்டமுறச் செய்கின்றனவே! மனத் திரையில் விரிந்திருக்கும் உன் வடிவை - வெறும் கறுப்பு வெள்ளைப் படங்களிலும் கண் குளிரப் பார்க்கின்றோம். காலச் சுழற்சியில் கலையாத உன் நினைவு, கலண்டர்த் திகதிகளால் காலந்தோறும் கொண்டாடுகின்றோம். உன் ஆத்மாவின் சாந்திக்காய் - அந்த ஆண்டவனை வேண்டுவதைவிட ஒன்றுமறியோம்

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டும்:

தந்தை, தாய்,
தங்கை, மைத்துனன்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [4557]

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரை விசர்நாய் கடித்தது

பருத்தித்துறை, மார்ச் 25

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு விசர்நாய் கடித்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை புலோலி தெற்கில் இடம்பெற்றது.

இவர்கள் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றபோதும் அங்கு தடுப்பு மருந்து இல்லாததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டி இருந்தது.

கடந்த வாரமும் இப்பகுதியில் இருவர் விசர்நாய்க்கடிக்கு உள்ளாகினர்.

இவர்கள் இருவரும் தடுப்பூசி ஏற்றுவதற்காக உடனடியாக வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூடு ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டு செல்லமாக வளர்க்கப்பட்ட நாயே இவர்களைக் கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-118]

## நாய்களுக்கு தடுப்பூசி போடுவது இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். மாநகரசபை எல்லைக்குள் கடந்த சில நாட்களாக முழுமூச்சில் மேற்கொள்ளப்பட்டு வந்த நாய்களுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கை இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

போதியளவு தடுப்பூசி மருந்து கைவசம் இல்லாததாலேயே தற்காலிகமாக தடுப்பூசி போடுவது நிறுத்தப்பட்டிருப்பதாக யாழ். மாநகர சபை சுகாதாரவைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். [த-18]

## கட்டாக்காலி நாய்கள் சாவகச்சேரியில் அதிகரிப்பு

### இம் மாதம் 66 பேர் கடியுண்டனர்

தென்மராட்சி, மார்ச் 25

சாவகச்சேரிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

கடந்த மாதம் 64 பேரும், இம்மாதம் 22 ஆம் திகதி வரை 66 பேரும் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டு சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த எண்ணிக்கையில் கடந்த மாதம் கடியுண்டோரில் 15 பேரும் இம் மாதம் 22 ஆம் திகதி வரை கடியுண்டோரில் 16 பேரும் விசர் நாயினால் கடியுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் வளர்ப்பு நாய் கடித்ததாகக் கூறி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பத்து வயதுச் சிறுமி ஒருவர் ஒரு மாதத்தின்பின் ஏற்புவலி ஏற்பட்டு மரணமாகி உள்ளார்.

கடந்த சனிக்கிழமை கைதடி மத்தியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கணேசன் சாரூபி என்பவரே இறந்தவர் ஆவார். [இ-117]

## போட்டிப் பரீட்சை 28 ஆம் திகதி

இலங்கை கல்வி நிர்வாகச் சேவை மூன்றாம் வகுப்பிற்கு, சேவை மூப்பு திறமை அடிப்படையில் பதவி உயர்வு அளிப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளை கொழும்பில் பெறலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## நடைபெறாது

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் ஞாயிறு தோறும் நடத்தப்படும் வாராந்தக் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வாரம் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [த]

## ஒத்திவைப்பு

யாழ். மத்திய கல்லூரி தமிழ் மன்றத்தினால் இம் மாதம் 27 ஆம் திகதி கொண்டாடப்பட இருந்த விபுலானந்தர் நினைவு தினம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## முகாமைத்துவ தினம்

யாழ். கல்வி அலுவலகத்தினால் முகாமைத்துவ தினம் இன்று புதன்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டிய நிகழ்ச்சிகள் பாடசாலை மட்டத்திலும், கல்வி அலுவலக மட்டத்திலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இன்று காலை பிரார்த்தனைக்கு முன்னர் பாடசாலைகளில் கொடிகளை ஏற்றி முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றியும் அதன் இன்றைய தேவை குறித்தும் விளக்கமளிக்கும் கூட்டங்களை நடத்துமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்வி அலுவலகத்திலும் இன்று காலை 8-25 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. (இ-5)

22 — 03 — 1992 இல் நடைபெற்ற

## அளவெட்டி அளவோலை விநாயகர் ஆலய

1990 ஆம் ஆண்டிற்குரிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில்

## பரிசு பெற்றோர் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | இல. 4348 | — | சு. அருணன், அளவெட்டி. |
| 2ஆம் பரிசு | இல. 4138 | — | அ. விமலன், அளவெட்டி வடக்கு. |
| 3ஆம் பரிசு | இல. 1624 | — | ந. வசந்தினி, மாரீசன் கூடல், இளவாலை. |
| 4ஆம் பரிசு | இல. 4265 | — | எஸ். திசம்பரன், அளவெட்டி. |
| 5ஆம் பரிசு | இல. 2561 | — | ஜி. கஸ்மிலா, சூராவத்தை, சுன்னாகம். |
| 6ஆம் பரிசு | இல. 1552 | — | க. கோடீஸ்வரன், கீரிமலை. |
| 7ஆம் பரிசு | இல. 5452 | — | நா. தர்சினி, கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. |
| 8ஆம் பரிசு | இல. 6477 | — | நா. ஞானகணேசன், அளவெட்டி தெற்கு. |
| 9ஆம் பரிசு | இல. 4260 | — | எம். மஃறூப், 74 அபூபக்கர் வீதி, சோனகதெரு. |
| 10ஆம் பரிசு | இல. 1387 | — | தெ. நடராசா, அளவெட்டி. |
| 11ஆம் பரிசு | இல. 1879 | — | க. இரத்தினம், அளவெட்டி. |
| 12ஆம் பரிசு | இல. 0515 | — | க. சுதர்சன், 118, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ். |
| 13ஆம் பரிசு | இல. 1999 | — | —— |
| 14ஆம் பரிசு | இல. 3289 | — | —— |
| 15ஆம் பரிசு | இல. 7219 | — | சு. விவேகானந்தன், அளவெட்டி. |
| 16ஆம் பரிசு | இல. 13257 | — | ம. தங்கேஸ்வரி, அளவெட்டி. |
| 17ஆம் பரிசு | இல. 6928 | — | க. சண்முகானந்தன், கொாங்கொடை. |
| 18ஆம் பரிசு | இல. 1588 | — | க. அழகேசன், அளவெட்டி. |
| 19ஆம் பரிசு | இல. 00653 | — | செ. சச்சிதானந்தம், கேணிக்கரை. |
| 20ஆம் பரிசு | இல. 1041 | — | சு. உமைபாலகி, கடக்கிரி, அளவெட்டி. |
| 21ஆம் பரிசு | இல. 6578 | — | மு. நாகரத்தினம், அளவெட்டி தெற்கு. |
| 22ஆம் பரிசு | இல. 2048 | — | —— |
| 23ஆம் பரிசு | இல. 10212 | — | ஸ்ரீ கோபிகிருஸ்ணா, அலவத்தை, அளவெட்டி. |
| 24ஆம் பரிசு | இல. 4823 | — | தணிகாசலம்பிள்ளை. கொல்லன் கலட்டி. |
| 25ஆம் பரிசு | இல. 1846 | — | பி. பாலராஜன், மெண்பெரிஸ் கல்லூரி, கண்டி. |

தகுந்த ஆதாரம் காட்டி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

— ஆலய வழிபடுவோர் சபையினர்.

[...14]

## ஹோமியோபதி, அக்குபஞ்சர் வகுப்புக்கள் ஆரம்பம்

மீண்டும் புதிய ஹோமியோபதி, அக்குபஞ்சர் வகுப்புக்கள் **3 — 5 — 92** ஆம் திகதியன்று ஆரம்பமாகின்றன.

மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் சங்க அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 — 4 — 92**

தலைவர்,
வட இலங்கை
ஹோமியோபதி சங்கம்.

தலைவர்,
வட இலங்கை
அக்குபஞ்சர் சங்கம்.

இல 35, நாவலர் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். [20220]

## திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

சங்கீத கலா வித்தகி

செல்வி தி. துளசி மனோகரி அவர்களின்

## புல்லாங்குழல் கச்சேரி

**காலம்:** 26 - 03 - 1992 நாளை மாலை 6. 45 மணி

**இடம்:** மன்ற அரங்கு **பிரவேசம்:** இலவசம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C/1735)

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும்,
விபுலானந்தரும்

## நூல் அறிமுகமும், ஆய்வரங்கும்

29-03-1992 ஞாயிறு மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

— சாளரம் வெளியீட்டாளர்கள்.

இந்நூல் 1920 களில் யாழ்ப்பாணத்தில் அரசியல் ரீதியாக முன்னணி வகித்த **யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின்** செயற்பாட்டை மையமாக வைத்து எழுதப்பெற்றது

[20217]

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

## கேள்விக் கூறு கோருதல்

எமது சங்கத்தால் லொறிச் சொந்தக்காரரிடமிருந்து கீழ்க் குறிப்பிடும்இடங்களிலிருந்து குறிப்பிடும் இடம் வரை பொருள்கள் ஏற்றிக் கொண்டுவர உரிய லொறிக் கூலிக்கான கேள்விக் கூறுகள் கோரப்படுகின்றன.

1. கொழும்பிலிருந்து கொம்படி வரை
2. கொம்படியில் இருந்து எமது சங்க களஞ்சியத்திற்கு
3. யாழ்ப்பாணத்தில் இருந்து எமது சங்க களஞ்சியத்திற்கு
4. நெல்லியடியில் இருந்து எமது சங்க களஞ்சியத்திற்கு
5. பருத்தித்துறையில் இருந்து எமது சங்க களஞ்சியத்திற்கு
6. அநுராதபுரத்தில் இருந்து கொம்படி வரை
7. நாளடிப்படையில் சங்க களஞ்சியத்திலிருந்து கிளைகளுக்கு [கிலோ மீற்றருக்கு]
8. கொழும்பில் இருந்து சங்க களஞ்சியம் வரை

(அ) கேள்விக் கூறுகள் தற்போதைய எரிபொருள் விலைக்கேற்ப குறிப்பிட்டாலும் எரிபொருள் ஏற்றம் அல்லது இறக்கம் ஏற்படுமிடத்து கட்டணம் எவ்வாறு இருக்கும் என்பதையும் கேள்விக் கூறில் சேர்த்தல் நல்லது. கேள்விக் கூறுகளை காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ சங்கத்திற்கு உரிமையுண்டு.

(ஆ) கேள்விக் கூறுகள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ கடித உறையினுள் வைத்து நன்றாக ஒட்டப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். தபால் உறையில் லொறிச் சேவை, கேள்விக் கூறு என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) 31-03-92 பிற்பகல் 3-30ற்கு அதுவரை கிடைத்த கேள்விக் கூறுகள் சமுகமளிக்கும் கேள்விக்காரர் முன்னிலையில் உடைத்து பார்க்கப்பட்டு தீர்மானத்திற்கு எடுக்கப்படும்.

- பொது முகாமையாளர்,

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி. [சி-1733]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை மக்கள் தற்போது அரசியல் தெளிவு பெற்றுவிட்டனர்

## பாத யாத்திரையாளர் மத்தியில் வாசு உரை

கொழும்பு, மார்ச் 25

தென்னிலங்கை மக்கள் இப்போது அரசியல் தெளிவு பெற்றுவிட்டனர். அவர்களை ஏமாற்ற முடியாது. இந்தப் பாதயாத்திரையில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

—இவ்வாறு தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா.

ஒன்பது கட்சிகள் நடத்தும் அரசுக்கு எதிரான பாதயாத்திரை காலியைச் சென்றடைந்த போது அங்கு மக்கள் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

பாதயாத்திரை காலி நகரைச் சென்றடைந்தபோது அங்கு மக்கள் வீதியின் இரு மருங்கிலும் திரளாகக் கூடி நின்று வரவேற்றனர். பாதயாத்திரையில் வந்தவர்களுக்கு குளிர்பானமும் வழங்கினர்.

காலி நகரில் பத்திரிகையாளரிடம் பேசிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் அனுரா பண்டார நாயக்கா:-

"இப்போராட்டம் இத்துடன் முடிந்துவிடாது. அரசு பதவியிலிருந்து இறக்கப்படும் வரை தொடரும்— எமது இந்தப் போராட்டம் பிரிவினைவாதிகளுக்குத் துணை போவதாக மக்களிடையே பிரசாரம் செய்ய அரசு எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது. பாதயாத்திரை பெருவெற்றி பெற்றுள்ளது''— என்றார். (அ-10)

# காடுகளிலிருந்து புலிகளை அகற்றவே நடவடிக்கையாம்

காடுகளில் உள்ள மறைவிடங்களில் இருந்து படையினர் மீது தாக்குதல் நடத்தும் விடுதலைப் புலிகளை வெளியே கலைப்பதே தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கம்.

தற்போதைய இராணுவ நடவடிக்கை குறித்து கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தன.

காட்டுக்குள் இருக்கும் விடுதலைப் புலிகளை வெளியே இழுக்கும் மூன்றாவது புலி வேட்டையே இது என்றும் அவை தெரிவித்தன. (இ-எ)

# உடுகம்பொலவின் கடவுச் சீட்டை பறிமுதல் செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, மார்ச் 25

பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு உடுகம்பொல வைத்திருக்கும் கடவுச் சீட்டைப் பறிமுதல் செய்யுமாறு மாளிகாவத்தை நீதிவான் குடியகல்வு, குடிவரவு கட்டுப்பாட்டாளருக்கு நேற்று உத்தரவிட்டார்.

திரு. உடுகம்பொல நாட்டை விட்டு வெளியேறாமல் இருக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி தேசிய புலனாய்வுப் பணியக அத்தியட்சகருக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.

திரு. உடுகம்பொல மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. [இ-எ]

# ஒரு வருட காலத்துக்குப் பின் ரயில்வே 'ஊழியர் ஊதியம்

சுமார் ஒரு வருட காலத்துக்குப் பின்னர் யாழ். ரயில்வே கடவை ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் நிலுவைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். அரசாங்க அதிபர் கொழும்பில் போக்குவரத்து அமைச்சு உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து ஊதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதற்கு முன் யாழ் ரயில்வே ஊழியர்கள் அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது கஷ்ட நிலையை விளக்கி இருந்தனர். [இ]

# நாடு திரும்பிய அரச ஊழியருக்கு மீண்டும் வேலை

கொழும்பு, மார்ச் 25

நாடு திரும்பிய தமிழ் அகதிகளில் உள்ள அரச ஊழியர்கள் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சகல அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், ஆளுநர்களின் செயலாளர்கள், அரச அதிபர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. தொண்டமான் அறிவுறுத்தலை வழங்கி உள்ளார். [இ-எ]

# பொன்னையா நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஈழகேசரி நா. பொன்னையாவின் 41 ஆவது நினைவு தினம் இம் மாதம் 29 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் அனுஷ்டிக்கப்படும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. [கலாநிதி] எஸ். ஜெபநேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி அ. சண்முகதாஸ் 'ஈழகேசரித் தமிழ்' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றுவார். [இ]

# 'மெரிதல்' வந்தது

யாழ்ப்பாணம் மார்ச், 25

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு ''மெரிதல்'' கப்பல் ஆயிரத்து 700 மெற்றிக் தொன் உணவுப்பொருள்களுடன் நேற்று முன்தினம் வந்து சேர்ந்தது.

கப்பலில் இருந்து 275 மெற்றிக் தொன் பொருள்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்டன.

எஞ்சிய பொருள்கள்நேற்று முதல் காங்கேசன்துறையில் இறக்கப்படுகிறது. [உ-3]

# எய்ட்ஸ் நோய் தடுப்பில் செஞ்சிலுவைச் சங்கம்

கொழும்பு, மார்ச் 25

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட இருக்கும் எய்ட்ஸ் நோய்க்கு எதிரான நடவடிக்கைகளுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் ஒரு கோடி 50 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கி உள்ளது.

கல்வி அமைச்சும் சுகாதாரக் கல்விப் பணியகமும் இத் திட்டத்திற்கு உதவியளிக்கவிருக்கின்றன.

இத் திட்டத்தின்படி எய்ட்ஸ் நோயின் கொடுமை பற்றி பொதுமக்கள் விளங்கிக் கொள்ள நாடெங்கும் கருத்தரங்குகளும் தகவல் சாதனங்களூடாக நிகழ்ச்சிகளும் நடத்தப்படவிருக்கின்றன. [இ-10]

# பொருள்கள் இறக்குவதில் பருத்தித்துறையில் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 25

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்குவதில் தொழிலாளர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

மூவாயிரத்து 200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை எட்டு நாட்களில் இறக்கியே சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.

வழமையாக இந்த அளவு உணவுப் பொருள்களை இறக்குவதற்கு 15 நாட்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது [இ-3]

## வேம்பிராய் மயான அபிவிருத்தி தொடர்பான அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் சாவகச்சேரி உப-பணிமனை எல்லைக்குள் உள்ள வேம்பிராய் மயானத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் அதற்கான ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் எவரும் இது தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புமிடத்து எழுத்து மூலமாகவோ, நேரிலோ தமது ஆலோசனைகளை விசேட ஆணையாளருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறான ஆலோசனைகள் எதிர்வரும் 15 - 04 - 1992 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பம்: பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
19 - 03 - 1992 [சி-1689]

மூளாய்
வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான

## பரிபாலன சபை

அன்புடையீர்!

17-3-1992 உதயன் பத்திரிகையில் வந்த விளம்பரப்படி 29-3-1992 இல் மேற்படி ஆலயத்தில் நடைபெற இருந்த ஆரம்பப் பொதுக்கூட்டத்தின் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளது. அங்கத்துவ சேர்வு முடிவு திகதியும் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி:
''சித்தி விநாயகர் கருணை மகத்தானது''
தர்க்கார்,
மூ. வ. சி. வி. தே. ப. ச. சார்பாக

மூளாய்.
22-3-1992 [சி/1687]


## ★ முதலாவது பிறந்த நாள் வாழ்த்து ★



செல்வி

### அமுதினி மோகன்ராஜ்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் - ஜோதினி தம்பதிகளின் செல்வப் புதல்வி அமுதினி தனது முதலாவது பிறந்த தினத்தை இல. 11, ஈச்சமோட்டை, தவராசா வீதியில் உள்ள தனது இல்லத்தில் இன்று [25-03-1992] புதன்கிழமை வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பூட்டி, கனடா அத்தை, மாமா, அத்தைமார், பெரியம்மா, பெரியப்பா அக்கா, சித்தப்பா, அன்ரி, பிரான்ஸ் மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம வைரவர் அருள்பெற்று, பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

[20170]



## கம்பியூட்டர் கல்வி

★ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

★ d BASE III+, LOTUS 1-2-3 WORD STAR 2000+

ஆரம்பம்:
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
27 — 03 — 1992 11-00 a.m.
சனி, ஞாயிறு வகுப்புகள்
28 — 03 — 1992 11-00 a.m.

★ கம்பியூட்டர் துறையில் நீண்ட கால அனுபவம் மிக்க ஆசிரியர்களால் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.
★ பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
★ O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
★ பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு விசேடமாக பயிற்சியளிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு யாழ். நகரில்:




UNIKCO COMPUTER CENTRE
37, Clock Tower Road,
Jaffna.

வடமராட்சியில்:
சதா பொன்ஸ்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

[சி-1686]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டைகள் — 04, பென்சன் புத்தகம், வங்கி சேமிப்புக் கணக்கு புத்தகம், மண் மீட்பு நிதி பற்றுச்சீட்டு, துவிச்சக்கரவண்டி பற்றுச்சீட்டுகள் ஆகியன அடங்கிய பை ஒன்று கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் எஸ். பரதாசன், 218/2, பலாலி வீதி, கந்தர்மடம் முகவரியில் ஒப்படைக்கவும். [20206]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, 26 வயது, B. Sc. உதயச் செவ்வாய், நட்சத்திரம்: அச்சுவினி அழகிய ஒரே மகளுக்குப் பெற்றோர் என்ஜினியர், எக்கவுண்டன்ற், பேராசிரியரைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20199]

யாழ்ப்பாண இந்து, செவ்வாய்க் குற்றமற்ற, படித்த, அழகிய, 42 வயது மணப்பெண்ணுக்குப் பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். நட்சத்திரம்: மகம். மங்களஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20155]

### மணமகள் தேவை

யாழ். இந்து, சொந்த இடம் யாழ்ப்பாணம். 28 வயது, உதயத்துச் செவ்வாய், நட்சத்திரம்: உத்தரம். இங்கிலாந்தில் வீசாவுடன் படித்துக் கொண்டிப்பவருக்கு நற்குணமுடைய, அழகான, A/L படித்த, உயரம் 5 அடி 1அங்குலத்திற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. உடன் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 394, C/o உதயன். [20209]

### புத்தாண்டுப் பலன்

நாடறிந்த சோதிடர் ஜோஸ்யரின் கணிப்பில் ஆங்கிரச வருஷ புத்தாண்டுப் பலன் வெளியாகியுள்ளது. பல்வேறு அம்சங்களுடன் அதிக பக்கங்கள். பன்னிரண்டு இராசிக்கும் ஒரே புத்தகம். விலை 9/75. பிரபல புத்தக சாலைகளில் விற்பனையாகின்றது. [20189]

### மயூரதி வெளியீடுகள்

1991 O/L உட்பட கணித வினாத்தாள்களும், செய்கைகளும் அடங்கிய மயூரதி வெளியீடுகள் விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள்: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில்.

[5065]

### திருத்த வேலைகள்

உங்களுடைய பழுதடைந்த பிரயாணப் பைகள், பாடசாலைப் பைகள், மகளிர் கைப்பைகள் என்பவற்றை எமது தொழிற்சாலையில் புதியதாக திருத்திக் கொடுப்போம். ராம்சன்ஸ் பிரயாணப் பொருள்கள் தொழிலகம், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(20183)

### இலவச திருமண சேவை

28 வயது, சுவாதி, செவ்வாய் 4, சுவிஸில் கடமை ஆற்றுபவருக்கு மணமகள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4560]

36 வயது, தொழில் புரியும் Marine Engineer மணமகனுக்கு சங்கீத ஞானமுள்ள, அழகான பெண்ணும், 30 வயது, Computer ஆகக் கடமை புரியும் பெண்ணுக்கு மணமகனும் தேவை. நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4559]

## கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

கொழும்புத்துறை, மார்ச் 25

யாழ். தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வெள்க்கள வேலைகளுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-30)

---

யா/வட்டு. இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்க

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யா/வட்டு. இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. சி. டாஸ் தலைமையில், 29-03-1992 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

- அமைப்புக் குழுவினர்.

[சி-1688]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## நாகலிங்கம் ஐயாத்துரை

மறைவு: 26- 02- 1992

27- 03- 1992 [ வெள்ளிக்கிழமை ] நடைபெறும் எமது குடும்பத்தலைவரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை - ஜீவராசா,
பெறாமக்கள்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

ஐ. பரமசிவம்,
சிவம் கபே,
முருகண்டி.

[4564]

---

COMMERCIAL BANK

# வர்த்தக வங்கி - யாழ். கிளை
# புத்தாண்டு பரிசுப் போட்டி

வருகின்ற தமிழ் / சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி

**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின்**

**யாழ். கிளையானது**

தனது வாடிக்கையாளர்களுக்கும் இப்பிரதேச மக்களுக்குமாக

புத்தாண்டுப் பரிசுத் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றது

இதன் பிரகாரம் கீழே தரப்பட்ட

கேள்விக் கொத்துக்கு சரியான விடை அளிக்கின்றவர்களில்

50 பேருக்கு அவரவர் அதிர்ஷ்டத்திற்கு உரிய வகையில்

★ பரிசில்கள் காத்திருக்கின்றன ★

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக் கொத்தை

முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் **31 - 03 - 1992** க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பவும் அல்லது கையளிக்கவும்.

குறிப்பு:- இப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் 31-03-1992 அன்று 18 வயதிற்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும்.

★ பரிசு பெறுபவர்களின் விவரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

இப் போட்டியில் வங்கியினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் தீர்க்கமானதும் ஆகும்.

வங்கி ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவரும் இப்போட்டியில் பங்குபற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

## வர்த்தக வங்கி - யாழ். கிளை
## கேள்விக் கொத்து

1. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி எப்போது ஸ்தாபிக்கப் பட்டது?

   ........................................................................

2. தற்போதைய வர்த்தக வங்கியின் யாழ். கிளைக் கட்டடம் முன்பு எந்த நிறுவனத்தின் உடைமையாக இருந்தது?

   ........................................................................

3. யாழ் வர்த்தக வங்கிக் கிளை இக் கட்டடத்தினைப் பொறுப்பேற்று எப்போது செயற்படத் தொடங்கியது?

   ........................................................................

4. வர்த்தக வங்கிக்கு தற்போது இலங்கையில் எத்தனை கிளைகள் உண்டு?

   ........................................................................

5. அவை எங்கெங்கு உள்ளன?

   ........................................................................

   ........................................................................

6. வர்த்தக வங்கியின் தலைமைச் செயலகத்தின் முகவரியைத் தருக?

   ........................................................................

7. இவ் வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குனரின் பெயர் என்ன?

   ........................................................................

8. வர்த்தக வங்கியினால் மிகவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சேமிப்புத் திட்டங்களின் பெயரினைத் தருக?

   ........................................................................

9. யாழ். வர்த்தக வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆகக் குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை எவ்வளவு?

   ........................................................................

10. தற்போது இவ் வங்கியினால் சேமிப்புக் கணக்கு வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் யாது?

    ........................................................................

**அனுப்புபவரின்**

முழுப் பெயர்:-........................................................

அடையாள அட்டை இலக்கம்/கடவுச் சீட்டு இலக்கம்:-..........................

முகவரி:-...............................................................

........................................................................

........................................................................

[சி-1781]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# சறுக்கி விழுந்த சக்கடத்தார்!

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை வகுப்பதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பிந்திய (23-3-1992 ஆம் திகதிய) முடிவு மிகவும் பாதகமானதாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை, பிரேமதாசா அரசாங்கம் மெதுவாக, (நைஸாக) நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கைகழுவி விட்டபோதே, இந்தக் குழு ஒரு காலம் கடத்தும் வழமையான தந்திரம் தான் என்று சந்தேகிக்கப்பட்டது. அதனை உறுதிசெய்யும் விதத்தில் குழுவின் இப்போதைய முடிவு அமைந்திருக்கிறது!

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தாமல், அவர்களின் ஆதரவின்றி, அனுசரணையின்றி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணுவது என்பது உரிய பலன் தராத முயற்சி. இந்தச் சிறிய உண்மையைப் புரிந்து கொள்ளாமல் சிங்களத் தலைவர்கள் தமது ஆற்றல்களையும் காலத்தையும் வீணாக்குகிறார்கள்

விடுதலைப் புலிகள் எழுத்து மூலமாக அழைப்பு விடுத்தால், தாம் யாழ்ப்பாணம் வந்து, புலிகள் தரப்பின் நிலைப்பாட்டை அறிந்து செல்லத் தயாராக இருப்பதாக முதலில் கூறிய தெரிவுக்குழு, இப்போது புதிதாகப் புருடா விட, நிபந்தனை விதிக்க முயற்சிக்கிறது.

விடுதலைப் புலிகள், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அனுப்பிய அழைப்புக் கடிதத்தில் தெரிவித்த மூன்று அம்சங்களும் நியாயமானவை.

விடுதலைப் புலிகளின் அனுகு முறையை வெட்டித் துண்டிப்பது போல தெரிவுக் குழு புதிதாக நிபந்தனை விதிக்க முற்பட்டிருப்பது தமிழர் பிரச்சினைக்குப் பயனுள்ள தீர்வு ஒன்றை வகுப்பதில் அதற்கு அக்கறை இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது!

ஆளுங்கட்சியான ஐ.தே. கட்சியிடமும், பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீ.ல.சு. கட்சியிடமும் யோசனைகள் தருமாறு நிபந்தனை விதிக்கத் திராணியற்ற தெரிவுக்குழு, விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனை விதிக்க முயல்வது என்ன நியாயம்?

பேச்சுவார்த்தை மூலம் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்கான கதவை இழுத்து மூடும் பணியில் தெரிவுக் குழு இறங்கியிருக்கிறது என்பதும் இதிலிருந்து புலப்படுகிறது. இன்னும் விளக்கமாக, தெளிவாகச் சொல்வதானால், தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்கவே அதுவும் விரும்புகிறது.

1987 இல் இந்திய அரசும் இலங்கை அரசும் சேர்ந்து திணித்த தீர்வு என்னாயிற்று. அதன் விளைவுகள் எத்தகையன என்பதை தெரிவுக் குழுவில் உள்ள அரசியல்வாதிகள் சிறிதேனும் பகுத்தாய்ந்ததில்லையா?

தெரிவுக்குழு தனது அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும் என்பது ஒரு தகவல். வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து எதுவித பிரஸ்தாபமும் இல்லாமலே குழுவின் அறிக்கை தயாராகுவதாக இன்னொரு தகவல். அதனால் தமிழர் தரப்பின் யோசனை எதுவுமில்லாமலே அறிக்கையைப் பூர்த்தி செய்யக் குழுவினர் அவசரப்படுகின்றனரோ?

எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில், சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்த கதையாகத் தான் தெரிவுக்குழுவின் முடிவும் ஆகப் போகிறது!

## இன்று

பளை இத்தாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு இத்தாவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு கிளை தலைமையகத்தில் நடைபெறும்.

''எனது பல்கலைக்கழக அனுபவங்கள்'' என்ற பொருளில் முன்னாள் இலங்கைப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. இராசேந்திரம் கருத்துரை வழங்குவார்.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் நடத்தப்படும் கருத்தரங்குத் தொடரில் நான்காவது கருத்தரங்கு இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

''சோவியத் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களும் அதன் தாக்கங்களும்'' என்ற தலைப்பில் பொருளியல்துறைத் தலைவர் எஸ். கே. சண்முகநாதன் உரையாற்றுவார்.

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் — 15 வயதுக்குட்பட்டோர் — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்தச் சுற்றுப் போட்டியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடசாலை அணிகள் பங்குபற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இறுதியாட்டத்தில் யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை அணியும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும் மோதுகின்றன.

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று பிற்பகல் 3 00 மணிக்கு—

மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து மட்டுவில் இளைஞர் அணி சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதும்.

கலைவாணி அணியை எதிர்த்து தோப்புக்காடு அணி சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் மோதும்.

வலைபந்தாட்டப் போட்டியில் சென். மேரிஸ் வெள்ளை அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய ''ஏ'' அணி மோதும். இந்தப் போட்டி யாழ். சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

## உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அன்னை பூபதி நினைவாக இன்று காலை பளை வட்டவைப் பிரிவில் — இத்தாவில் முருகன் கோவில் முன்றலில்— உண்ணாவிரதம் இடம்பெறும்.

இன்று இரவு எட்டு மணிக்கு கருத்தரங்கும் இடம்பெறும்.

[உ-3]

## பூநகரி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சூடுபட்டு பலியானார். மற்றொரு வள்ளத்தில் சென்ற — குருநகர் தொடர்மாடி மனைகளைச் சேர்ந்த யேசுதாஸன் சுதாகர் [வயது 16] தோள் பட்டையில் படுகாயமடைந்தார். அவர் குருநகர் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு முதலுதவி சிகிச்சைக்குப் பின் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். [உ-31-38]

# நிதி சேர்க்க கலை நிகழ்ச்சி: நடத்த தற்காலிகத் தடை!

யாழ். குடாநாட்டில் நிதி சேகரிப்பதை, நோக்கமாகக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

யாழ் குடாநாட்டில் கலை நிகழ்ச்சிகளை நிதி சேகரிப்பதன் பொருட்டு நடத்துவோர் முன்கூட்டியே விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தில் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென நாம் அறிவித்திருந்தும் பலர் எங்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் நிகழ்ச்சிகளை நடத்துவது எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆகவே இனிமேல் எக்காரணம் கொண்டும் யாராவது எமது முன் அனுமதியின்றி நிதி நிகழ்ச்சிகளை நடத்த முனைந்தால் அந்த நிகழ்ச்சிகள் தடை செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

மே மாதக் கடைசி வரை தனியார் யாரும் நிதி சேர்ப்பதற்கான நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதை சகல கழகங்கள், தனியார் அமைப்புக்கள் போன்றவற்றிற்கு அறியத் தருகின்றோம். எங்களிடம் முன் அனுமதி பெறாமல் ஏப்ரல், மே மாதங்களில் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோர் ஜூன் மாதம் வரை அந் நிகழ்ச்சிகளை ஒத்திப் போடும்படியும் கேட்டுக்கொள்கின்றோம். —

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-த]

# உலகக் கிண்ண கிரிக்கெட்: இன்று இறுதியாட்டம்

மெல்போர்ன், மார்ச் 25

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை மெல்போர்ன் நகரில் பாகிஸ்தான் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையே நடைபெறுகிறது.

இப்போட்டி தொடர்பிலான ஒழுங்கு விதிகளில் மாற்றம் எதுவும் செய்வதில்லை என்று போட்டி அமைப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

அரையிறுதி ஆட்டத்தின் போது சர்ச்சையைக் கிளப்பிய விதியை இறுதி ஆட்டத்தின் போது கைவிட வேண்டுமென பாகிஸ்தான் அணித் தலைவர் இம்ரான்கானும், இங்கிலாந்து அணித் தலைவர் கிறகாம் கூச்சும் கோரியிருந்தனர்.

மழை காரணமாக ஆட்டத்தில் தாமதம் ஏற்படுமானால் இரண்டாவது நாளுக்கும் ஆட்டத்தை நீடித்து குறிப்பிட்டளவு ஓவர்கள் முழுவதையும் வீசக்கூடியதாக விதி மாற்றப்பட வேண்டுமென இம்ரான் கான் கேட்டிருந்தார்.

ஆனால் விதி மாற்றப்படமாட்டாதென அமைப்பாளர்கள் தெரிவித்து விட்டார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த விதி அமுலில் இருப்பதாகவும் —

கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து நாடுகளும் இவற்றை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் —

நெருக்குதல் காரணமாக விதியை மாற்றுவது முறையானதல்ல எனவும் போட்டிக் குழுத் தலைவர் மல்கம் கிறேஸ் கூறியுள்ளார்.

[உ-எ-10]

# வியாபாரத்துக்கு சென்றவர் சடலமாகக் கண்டு பிடிப்பு

## மோட்டார் சைக்கிள், பணம் அபகரிப்பு

கொடிகாமம், மார்ச் 25

வியாபார நோக்கத்துக்காக கொடிகாமத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வவுனியா நோக்கிப் புறப்பட்ட இளைஞர் ஒருவர் இரணைமடுக் காட்டில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த ஐ. சிறீஸ்கந்தராசா [21 வயது] என்பவரே இறந்தவர் ஆவார்.

பிரஸ்தாப இளைஞர் கடந்த ஏழாம் திகதி வவுனியா நோக்கிப் புறப்பட்டிருந்தார் என்றும் —

அவர் வீடு திரும்பாததால் உறவினர்கள் தேடி வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரணைமடுக் குளத்துக்கு அருகே சடலம் ஒன்று காணப்பட்டு, பின்பு அடையாளம் காணப்படாத நிலையில் எரிக்கப்பட்டதாக தகவல் கிடைத்ததை அடுத்து அவரது உறவினர்கள் அவர் அணிந்திருந்த உடைகள் மூலம் அவரை அடையாளம் கண்டனர்.

அவரது மோட்டார் சைக்கிளும், அவரிடம் இருந்த பணம் மூவாயிரம் ரூபாவும் பறிபோயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-75]

# காங்கிரஸ் எம். எல். ஏ. வீடு; குண்டினால் தகர்க்க திட்டம்

சென்னை, மார்ச் 25

தமிழ்நாடு சட்டசபையில் அங்கம் வகிக்கும் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாளின் இல்லத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்க சிலர் திட்டமிட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையில் நேற்று இத்தகவலை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் வெளியிட்டார்.

''ஒரு குறிப்பிட்ட கட்சியினர் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசி வருகின்றனர்'' என்றும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

அதனை அடுத்துப் பேசிய திருமதி பொன்னம்மாள் தம்மையும் தம் குடும்பத்தினரையும் அழிக்க குறிப்பிட்ட ஒரு கட்சியினர் சதி செய்து வருவதாகச் சொன்னார்.

நிலக்கோட்டைத் தொகுதியில் உள்ள தமது வீட்டைக் குண்டு வைத்துத் தகர்க்க சில சக்திகள் திட்டமிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து விசாரணை நடத்தப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சபையில் உறுதியளித்தார். [உ-எ]

## பாதுகாப்பாக உள்ளனர்

கொழும்பு, மார்ச் 25

முன்னாள் சோவியத் யூனியனில் கல்வி பயின்ற இலங்கை மாணவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்று கொழும்பில் உயர்கல்வி அமைச்சும், வெளியுறவு அமைச்சும் கூட்டாக உறுதியளித்துள்ளன.

[இ-எ]

# மிருதங்க தாள வாத்திய போட்டி

தெல்லிப்பழை, மார்ச் 25

தவில் மேதை இணுவில் என். ஆர். சின்னராசா ஞாபகார்த்தமாக இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபையினர் மிருதங்க தாள வாத்தியப் போட்டிகளை நடத்தவிருக்கின்றனர்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

[இ-68]

# சிறுவர்களுக்கு காவல்துறை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 25

'பெரியவர்களை சிறுவர்கள் சைக்கிளில் ஏற்றிச் செல்வது தவிர்க்கப்படவேண்டும்'.

தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறுவர்கள் பெரியவர்களை சைக்கிளில் ஏற்றிச் செல்வதால் பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன. வீணான உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

[இ 3)

# 'குமாரி' மூலம் நெடுந்தீவுக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நெடுந்தீவுப் குடிமக்களுக்கு விநியோகிப்பதற்கு என 40 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் ''குமாரி'' கப்பல் மூலம் நேற்று முன்தினம் அனுப்பப்பட்டன.

பொருள்கள் இறக்கி முடிந்ததும் குமாரி கப்பல் நேற்று பருத்தித்துறைக்குவந்து அங்கிருந்து கொழும்பு திரும்பியது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இந்தக் கப்பலில் கொழும்பு சென்றுள்ளார். [உ-3]

# சத்திர சிகிச்சை ஸ்பிரிட் சப்பலில் வந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 25

சத்திர சிகிச்சைக்குத் தேவையான ஸ்பிரிட்டை வடக்கே எடுத்து வருவதற்கு இருந்து வந்த தடை ஓரளவு நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரிக்கும், தனியார் பார்மஸி ஒன்றுக்கும் குமணா கப்பலில் சத்திர சிகிச்சை 'ஸ்பிரிட்' வருவதாக கப்பல் பொருள்கள் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்ய .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அணுசக்தி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னர் லெனின்கிறாட் என்று அழைக்கப்பட்டு வந்த சென். பீற்றர்ஸ்பேர்க் நகரில் இருந்து நூறு கிலோ மீற்றர் தொலைவில் இந்த அணு உலை நிலையம் உள்ளது

[உ-எ]

## வினாத்தாள்கள்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க வாகன அணி மூலம், கிளிமலை — காங்கேசன்துறை பாதையூடாக யாழ்ப்பாணம் கொண்டு வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான வினாத்தாள்களை அந்தந்தப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-த-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் சோமசுந்தரம்

திருமதி பாக்கியம் சோமசுந்தரம் 21-03-1992 அன்று காலமானார். அன்னார் கோணாமலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ் சென்ற வே. சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற திருமதி செல்வரத்தினம் கனகம்மா, சோ. சொக்கலிங்கம் [ பிராந்திய முகாமையாளர், வடக்கு / தெற்கு வ. பி. போ. சபை ] ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரட்ணம், சொர்ண சந்திரா தேவி [ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அருமை மாமியாரும், சத்தியவதி [ கனடா ], திலக வதி [கொழும்பு], காலஞ் சென்ற லலிதா, செல்வதாஸ் [வள்ளுவன்], சியாம் சுந்தர், மதன் சுந்தர், பிரசாந்தி [மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், சிந்துஜாவின் [கனடா] அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [25-03-1992] 315, நாவலர் வீதி இல்லத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
சோ. சொக்கலிங்கம்.
[மகன்]
Area Manager
NRTB

315, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[20212]

## திருமதி கண்மணி தம்பையா

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தம்பையா கண்மணி அவர்கள் 7-3-92 இல் நயினாதீவில் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான வீரவாகு, பொன்னம்பலம், சின்னத்தம்பி, நல்லையா, நாகமுத்து, முத்துப்பிள்ளை, வைரிப்பிள்ளை, மாணிக்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. பரமநாதன்.
(பெறாமகன்)

வேதக் கோவில் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[4565]

## கனகசபைக் குருக்கள் சிவசிதம்பரக் குருக்கள்

16/7, சீனியர்லேன் கலட்டியை வசிப்பிடமாகக் கொண்ட கனகசபைக் குருக்கள் சிவசிதம்பரக் குருக்கள் நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற கனகசபைக் குருக்கள் - பாக்கியரெத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், விக்னேஸ்வரன், மனோன்மணி, புஸ்பராணி, ராதாராணி, ஜெயந்தி, ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஈஸ்வரக் குருக்கள், திருமதி உ. புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
க. ஈஸ்வரக் குருக்கள்
[தமையன்]

16/7 சீனியர்லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

[20223]

## திருமதி நல்லம்மா சைமன்

திருமதி நல்லம்மா சைமன் காலமானார். அன்னார் நல்லூரை பிறப்பிடமாகக் கொண்டவரும், காலம் சென்ற வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளையின் மகளும், காலம்சென்ற சைமனின் அன்பு மனைவியும், யோகராஜா, தர்மராஜா [கனடா], தங்கராஜா, சிவராஜா, பத்மராஜா [கனடா], சுதந்திரராஜா [இத்தாலி], கிருஷ்ணராஜா [கனடா], நாகேந்திரராஜா [கனடா], யோகமணி, குணமணி, தவமணி, ஜெயமணி, கருணைமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லம்மா [போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], சோபி [கனடா], பாக்கியம் சிவராஜா [போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], கமலா, தர்மினி, ரமணி [கனடா], நடராஜா, குலசிங்கம் [வவுனியா] ஆகியோரின் அன்பு மாமியும், சுதர்சினி, ஜனராஜ், வசீகரன் [டென்மார்க்], கிருஸ்ணானந்தி, தினேஸ்கரன், நிமலேஸ்கர, சசிமாலா, பிரேமலா, சியாமலா, குகன், சாந்தா, கிரன், தகீசன், சசீசன், ஜனனி, அரவிந்தன், சமந்தா, தஜீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [25-03-92] காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனச்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

38, செம்மணி றோட்,
நல்லூர்.

தகவல்:
S சிவராசா

[20224]

## அரபு லீக்கிடம் ஒப்படைப்பர்

கெய்ரோ, மார்ச் 25

1988இல் "பான் - அம்" விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் லிபிய இரகசியப் பொலீஸார் இருவரையும் அரபு லீக்கிடம் ஒப்படைக்கப் போவதாக லிபிய அரசாங்கம் நேற்று அறிவித்தது.

நியூயோர்க்கில் உள்ள ஐ. நாவுக்கான லிபியத் தூதர், ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தலைவரிடம் லிபிய அரசின் முடிவைத் தெரிவித்தார்.

இரண்டு லிபியர்களையும் அமெரிக்கா அல்லது பிரிட்டனிடம் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் லிபியா மீது விமானப் போக்குவரத்துத் தடை ஒன்றை விதிக்க ஐ. நா. பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுத்து வருவது தெரிந்ததே. [உ-எ]

## மணலாறில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாகத் தாக்கினர். மொத்தம் ஐந்து கவச வாகனங்களைத் தாக்கி நாசமாக்கினர்.

ஆர். பி. எல். எனப்படும் பின்னுதைப்பற்ற பீரங்கி, 50 கலிபர் துப்பாக்கி, மற்றும் ஆர். பி. ஜி. எறிகணை செலுத்தி ஆகிய நவீன ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது மூன்று அதிகாரிகள் உட்பட ஐம்பது படையினர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இறுதித் தாக்குதலை விடுதலைப் புலிகள் உக்கிரமான எதிர்த் தாக்குதல் மூலம் முறியடித்தனர்

அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை இராணுவத்தினர் அவசர அவசரமாக மண்கிண்டிமலை இராணுவ முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

அவ்வாறு பின்வாங்கிச் சென்றபோது புலிகளினால் வைக்கப்பட்டிருந்த 'ஜொனி' மிதிவெடிகளில் சிக்குண்ட பல இராணுவத்தினர் கால்களை இழந்தனர். பத்து இராணுவத்தினர் கால்களை இழந்தனர் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

பெரும் ஆளணி, ஆயுத, தளபாட இழப்புகளுடன் இராணுவத்தினர் 'ஹயபார' நடவடிக்கையை நேற்றுடன் முடித்துக்கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கவசப் படையின் தாக்குதல்களுக்கு இராணுவத்தினரால் ஈடுகொடுக்க முடியாமற் போயிற்று எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [அ-த]

## நீர் இறைக்கும்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தப் பொருள்களை இன்று பருத்தித்துறையில் இருந்து ஏற்றி வருவதற்காக யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

அதன் பொருட்டு, ப. நோ. கூ. சங்கங்களை தமது லொறிகளையும் இரண்டு பிரதிநிதிகளையும் இன்று காலை 9 மணிக்குப் பருத்தித்துறை இறங்குதுறைக்கு அனுப்ப வேண்டும் என்று கூட்டுறவுப் பகுதியினர் வலியுறுத்தி உள்ளனர். [அ]

## படுகொலை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

ஆணைக்குழு அங்கத்தவர்கள் தமது அறிக்கையை நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவை நேரில் சந்தித்து அவரிடம் கையளித்தனர். [உ-த]

## ★ உத்தரப் பிரதேசத்தில்

# பாரதீய ஜனதா ஆட்சி பதவியிலிருந்து நீக்கப்படும்

## சவான் எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 25

அயோத்தி இராமர் ஆலய விவகாரத்தில் மத்திய அரசின் உத்தரவுகளை உத்தரப் பிரதேச அரசு ஏற்று நடக்க வேண்டும். அப்படி ஏற்று நடக்காத பட்சத்தில் அந்த மாநில பாரதீய ஜனதா அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்வதைத் தவிர வேறு மாற்று வழியே கிடையாது.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் முன் கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

மத்திய அரசின் உத்தரவுகளை ஏற்று நடக்காத மாநில அரசுகளை அரசியல் சாசனத்தின் 356 ஆவது ஷரத்தின் கீழ் பதவி நீக்கம் செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்றும் அமைச்சர் சொன்னார்.

ராஜ்ய சபையில், அயோத்தி இராமர் ஆலயப் பிரச்சினை தொடர்பான விவாதம் ஒன்றிற்கு பதிலளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அயோத்திப் பிரச்சினைக்குட்பட்ட கட்டடங்கள் சில மாநில பாரதீய ஜனதா அரசின் உத்தரவின் கீழ் இடிக்கப்பட்டு வருவதாக ஜனதா தள், காங்கிரஸ் மற்றும் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் எம். பிக்கள் ராஜ்ய சபையில் குற்றஞ் சாட்டினர்.

அப்படி இடிக்கப்படும் செயல் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு முரணானது என்றும் அவர்கள் கூறினார்கள்.

அப்போதே திரு. சவான் முன் கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

இதேவேளை — எந்தவொரு சட்டத்தையும் மீறாத வகையில் அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டுவது என்பதில் தமது கட்சி உறுதி கொண்டிருப்பதாக பாரதீய ஜனதாத் தலைவர் எல். கே. அத்வானி அறிவித்துள்ளார். [இ-எ]

## கொழும்பிலிருந்து

# தனியாருக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொழும்பில் வசிக்கும் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக — கப்பல் மூலம் — அனுப்பிய உணவுப் பொருள்கள் நேற்று முதல் உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

''ஏகேயிஸ்'' என்ற நிறுவனம் மூலம் அனுப்பப்பட்ட பொருள்களே விநியோகிக்கப்படுகின்றன.

சுன்னாகத்தில் வைத்து முதல் தொகுதியாக நூறு பேருக்கு இந்தப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டதாக அந்நிறுவனப் பிரதிநிதி தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வைத்து உணவுப் பொருள் வழங்கலுக்காகப் பணம் செலுத்திய சுமார் 2 ஆயிரம் பேரின் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கே தற்போது இங்கு பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

உணவுப் பொருள் வழங்கலுக்காக கொழும்பிலிருந்து கப்பலில் ஏற்றிவரப்பட்ட 125 மெற்றிக் தொன் பொருள்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்டு அங்கு நீண்டகாலம் தேங்கிக் கிடந்ததாகவும் — நீண்ட கால தாமதம் மற்றும் பலத்த சிரமம் ஆகியவற்றின் மத்தியில் இந்தப் பொருள்களை பின்னர் பருத்தித்துறை மூலம் குடாநாட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாக இருந்த போதிலும், அப்பொருள்களில் சுமார் 50 மெற்றிக் தொன் காணாமல் அல்லது பழுதடைந்து போய் விட்டதாகவும் ''ஏகேயிஸ்'' நிறுவனப் பிரதிநிதி உதயனுக்குத் தெரிவித்தார்.

காணமல் அல்லது பழுதடைந்து போன பொருள்களுக்குப் பதிலாக புதிய பொருள்களை இரு வாரகாலத்துக்குள் குடாநாட்டுக்குள் கொண்டுவர தமது நிறுவனம் முயற்சி எடுத்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

கொண்டு வரப்பட்ட பொருள்கள் தற்போது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக விநியோகிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். [உ-3]

## மண்டைதீவிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

மண்டைதீவு பகுதியில் இருந்து நேற்றிரவு 9 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சேத விவரம் தெரியவரவில்லை.

# மரண அறிவித்தல்

## திருமதி கிறிஸ்ரி ஜொய்சி மரியரட்ணம்

நேற்று முன்தினம் காலமான திருமதி கிறிஸ்ரி ஜொய்சி மரியரட்ணம் அவர்களின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை [26-3-92] நடைபெறும்.

அன்னாரின் பூதவுடல் 30, ஆசீர்வாதம் ஒழுங்கை (ஆஸ்பத்திரி வீதி), யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து நாளை பிற்பகல் 3 மணிக்கு அடக்க ஆராதனைக்காக புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவன்

[20225]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org